தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுலை 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளினால், நிதி நிலைமை, நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையிற்கு இணங்கியதாக அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் உண்மையாகவும் நியாயமானதுமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முளைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ள.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2025 பெப்ரவரி 21ஆம் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16ஆம் திகதிய 06/2024 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும், அந்த தேவைபாட்டிற்கு மாற்றமான சந்தர்ப்பம் ஒன்று பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
அரச கணக்குகள் வழிகாட்டியின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றை, காசு மற்றும் குறுக்கு பதிவு ஆகிய இரண்டையும் கவனத்திக் கொண்டு நேர் முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டிய போதும் திணைக்களத்தினால் காசாகக் கிடைத்த முற்பண பெறுவனவு மற்றும் காசால் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவை மாத்திரம் கவனத்திக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முறபண பெறுவனவு மற்றும் முற்பண கொடுப்பனவு ரூபா 1,074,913 தொகை வீதம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக, செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் காய்ச்சல் அப்பெருமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	மொத்த காசுப் பாய்ச்சலிற்கும் இதனூடாக தாக்கம் ஏற்படவில்லை.	அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

மூலதன செலவினம்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
ஆக்கபூர்வ அரச முதலீட்டு முகாமைத்துவத்திற்காக கொள்ளளவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் Completion of Milestone of Information System for Project Proposals இக்காக உடன்படிக்கை பிரகாரம் பணிகளை நிறைவு செய்வது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளாது, 2024 திசெம்பர் 19ஆம் திகதிய பிரதான ஆலோசகரின் மெமோ பத்திரம் மற்றும் குறித்த நிறுவனத்தின் இன்வொயிசை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,454,011 இனை செலுத்தப்பட்டுள்ளவாறு காசோலை எழுதப்பட்டிருந்தது. பின்னர், பிரதான ஆலோசகரால் கடமை பூர்த்தி செய்யப்படாததனால் கொடுப்பனவை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டு இருந்ததுடன், 2024 திசெம்பர் மற்றும் 2025 சனவரி மாதம் வங்கி இணக்க கூற்றில் விவரங்கள் பிரகாரம் இந்த காசோலை விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலையாக காண்பிக்கப்பட்டிருந்த போதும், அந்த காசோலையை உரிய நிறுவனத்திற்கு விநியோகிக்காது 2025 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உண்மையாக செலவு செய்யப்படாத ரூபா 1,454,011 தொகை காரணமாக, மீளாய்வாண்டு நிதிக்கூற்றுகளில் செலவினம் மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் அந்த பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	ஆக்கபூர்வ அரச முதலீட்டு முகாமைத்துவத்திற்காக கொள்ளளவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடமை முழுமையாக நிறைவேற்றியுள்ள ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் செயற்த்திட்ட பணிப்பாளரினால் 2024 திசெம்பர் 13 ஆம் திகதிய கடிதம் மூலம் உறுதிப்பாட்டை வழங்கியிருந்ததுடன், அந்த செயற்திட்டத்தின் கொடுப்பனவுகளை செய்யும் கடிதக்கோவைகளின் தாமதம் காரணமாக கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உள்ளக மெமோ பத்திரத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது இந்த செயற்திட்டத்தின் கீழ் இந்த மென்பொருளிக்காக மேற்கொள்ளும் செலவினம் 2024 ஆண்டில் மதிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளதுடன், அதன் பணிகள் 2024 திசெம்பர் மாதத்தில் நிறைவேற்றியதன் பின்னர் நிதிப்பிரமாணம் 135 அதிகாரம் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் மற்றும் மேற்குறித்த நிறுவனம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவு ஆவதுடன் உண்மையாக மேற்கொண்ட கொடுப்பனவாகும்.	ஆண்டுக்குரிய செலவினம் மற்றும் சொத்துக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டியமை மற்றும் திறைசேரி அங்கீகாரம் இன்றி ஆண்டு இறுதியில் பணம் நிறுத்தி வைத்திருக்கக் கூடாது.

2. ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்தும்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
மீண்டெழும் மூன்று செலவின விடயங்கள் மற்றும் ஐந்து மூலதன செலவின விடயங்களிற்குரிய மதிப்பீட்டு நிதி ஏற்பாடு கூட்டுத் தொகை ரூபா 10,850,000 இலிருந்து ரூபா 8,085,573 தொகை இஞ்சி இருந்ததுடன் அந்த மீதி 33 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைலான வீச்சளவை கொண்டிருந்தது.	செலவினத்தை கட்டுப்படுத்தியதும், திருத்தங்கள் மேற்கொள்ளாததும், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரண சேவை உடன்படிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் வாகன காப்பருதிக்கான செலவு குறைந்தமை, பாடநெறிகளை கற்றல் மற்றும் உள்நாட்டு பயிற்சிகளுக்கு செல்லுதல் மட்டுப்படுத்தப்பட்டமை, கடந்த ஆண்டு இறுதி பகுதியில் உள்நாட்டு பயிற்சிகள் நடத்துவதற்கு திட்டமிட்டுஇருந்த போதும், ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு நிறுவனம் அதற்கு நிதி உதவியை வழங்கியமை மற்றும் அந்த பாடநெறியை 2025 ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை, அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரமும் இயந்திர உபகரணங்கள் கையகப்படுத்தாமை, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களை மேற்கொள்ளாமை மேலும் வாகன பயன்பாடு குறைந்தமை காரணமாக வாகனங்களுக்கான பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளாமை, போன்ற காரணங்களினால் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது.	மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 கொண்டு அரசு நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்படுமாறு வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
திணைக்களுத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பொறுப்பு துறைகள் மற்றும் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்காக பொறுப்பாய்ந்த உத்தியோதர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கவில்லை. வழிகாட்டியின் 3(ஊ) பந்தி பிரகாரம், செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளக கணக்காய்வு திட்டத்தை உள்ளடக்கி இருக்கவில்லை.	2024 ஆண்டுக்காக செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பொறுப்புகள், துறைகள் மற்றும் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் தவறுதலாக அதற்கான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் அது 2025 ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது.	அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டை வழங்கிக் கொள்ளாது உணவு பாதுகாப்பு மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டம் மற்றும் இலங்கை சந்தை (PALAM/A) ஆகிய 02 செயற்திட்டங்களின் கீழ் 06 செலவு விடயங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 2,330,064,097 தொகை மீளாய்வாண்டில் குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.பி 66 மூலம் நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்தது.	உணவு பாதுகாப்பிற்காக மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டத்தின் 04 செலவு விடயங்களிற்கு நி.பி 66 மூலம் நிதிஏற்பாடு மாற்றப்பட்டுள்ளதாகவும், இலங்கை சந்கை அமைப்பு இரண்டாம் II ஆம் கட்டம் சேர்த்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2024 ஆண்டின் பெப்ரவரி மாதம் கிடைத்ததால் அந்த செயற்கிட்டத்திற்கு நிதி ஏற்பாடு தேவைப்பாட்டை குறை நிரப்பு மதிப்பீட்டு மற்றும் நி.பி 66 மூலம் பெறப்பட்டுள்ளது.	சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமாக வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படும் உணவு பாதுகாப்பு மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டம், இலங்கை நிதித்துறை பாதுகாப்பு குழும கருத்திட்டம் (அவுஸ்திரேலியாவின் மானியம்), வியாபாரத்தின் தேசிய வருமானம், செலவின செயற்பாடுகளில் துரித பெறுபேறுகளிற்கான உதவி தொடர்பான செயற்திட்டம் மற்றும் ஆக்கபூர்வ அரச முதலீட்டிற்காக	**உணவு பாதுகாப்பு மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டம்.** செயற்திட்ட மொத்த மதிப்பீட்டில் ரூபா 75,018,761 தொகை மாத்திரம் இலங்கை சந்தை அமைப்பு கருத்திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிதிஏற்பாடு மாற்றல் உணவு பாதுகாப்பு மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டத்தினுள்ளே மாற்றப்பட்டுள்ளது.	-மேற்படி-

கொள்ளளவு அபிவிருத்தி ஆகிய நான்கு செயற்திட்டங்களிற்கு ஒதுக்கிய, மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டின் கூட்டுத் தொகை ரூபா 2,967,780,000 இலிருந்து ரூபா 2,282,783,809 தொகை அந்த செயற்திட்டங்களின் செலவின விடயங்களிற்கு பயன்படுத்தாது வேறு செலவு விடயங்களிற்கு நி.பி 66 மூலம் மாற்றப்பட்டிருந்தது. அந்த மாற்றப்பட்ட பெறுமதி ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் 08 சதவீதம் முதல் 100 சதவீத வீச்சளவில் நிலவின.

இலங்கை நிதித்துறை பாதுகாப்பு குழும கருத்திட்டம் (அவுஸ்திரேலியாவின் மானியம்)

செயற்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு மானியம் (13) மூலத்தின் கீழ் வழங்கிய நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 700,000,000 ஆன எஞ்சிய நிதிஏற்பாடு இலங்கை சந்தை அமைப்பு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டதுடன், அக் கருத்திட்டத்தின் வெளிநாட்டு நிதியீட்டல் சார்ந்த கிரயம் (17) கீழ் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 45,120,960 ஆன நிதிஏற்பாடு வியாபாரத்தின் தேசிய வருமானம், செலவின செற்பாடுகளின் துரித பெறுபேற்று உதவி செயற்திட்டத்திற்கு மற்றும் ரூபா 4,879,040 ஆன நிதிஏற்பாடு இலங்கையில் சந்தை அமைப்பு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வியாபாரத்தின் தேசிய வருமானம், செலவின செயற்பாடுகளில் துரித பெறுபேறுகளிற்கான ஒத்துழைப்பு (Partner)

செயற்திட்டத்திற்காக ஒதுக்கிய ரூபா 5,000,000 நிதிஏற்பாடு இந்த செயற்திட்டத்தின் நிதி மானிய மொத்த உபகரண மூலங்கள் (13) கீழ் ஒதுக்கியுள்ள நிதிஏற்பாட்டிற்காக மாற்றப்பட்டது.

ஆக்கபூர்வ அரச முதலீட்டிற்காக கொள்ளளவு அபிவிருத்தி

செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்கு எடுக்காத எஞ்சிய நிதிஏற்பாடு மேலதிக நிதிஏற்பாடு தேவையாகவுள்ள இலங்கை சந்தை அமைப்பு (PALAM/A) செயற்திட்டத்திற்கு மாற்றுவதாகவும், நிதிஏற்பாடு பயன்படுத்தாது எஞ்சுகின்ற தேவையுள்ள செயற்திட்டங்களிற்கு நி.பி. 66 பிரகாரம் மாற்றுவதால் மேலதிக நிதிஏற்பாட்டை வினைத்திறனாக முகாமைசெய்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுப்பப்பட்டன.

(இ)	உணவு பாதுகாப்பு மற்றும் சீவன உபாய மீள்ளமைப்பு அவசர உதவி செயற்திட்டத்தில் 03 மூலதன செலவு விடயங்களிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 1,870,000,000 ஆன மதிப்பீட்டு நிதிஏற்பாட்டிலிருந்து நி.பி 66 மூலம் வேறு செலவின விடயங்களிற்கு நிதிஏற்பாட்டை மாற்றிய பின்னரும், ரூபா 369,188,319 தொகை எஞ்சியிருந்தது. அது அந்த செலவின விடயத்தின் தேறிய நிதிஏற்பாட்டின் 83 சதவீதம் முதல் 98 சதவீத வீச்சளவில் நிலவியதுடன், மேற்குறித்த செயற்திட்டத்தின் கீழ் 237-1-1-20-2202-13 மற்றும் 237-1-1-20-2202-17 (அபிவிருத்தி உதவிகள்) ஆகிய 2 மூலதன செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடான கூட்டுத் தொகை ரூபா 420,000,000 இல் கூட்டுத் தொகை ரூபா 197,695,768 தொகை பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்ததுடன் சேமிப்பானது அந்த இரண்டு செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டில் 45 சதவீதம் மற்றும் 95 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம், தேவைப்பாட்டை இனங்காணாது நிதிஏற்பாட்டை ஒதுக்கியதால் எஞ்சியுள்ளதாகவும், அதனால் நாட்டின் ஏனைய முக்கியமான வைகளிற்கு நிதியை ஈடுபடுத்த முடியாதுள்ளதாகவும், கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2024 ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்த்தல் மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு இடம்பெறாத காரணத்தால் செயற்திட்டத்தின் நிதிஏற்பாடு எஞ்சியுள்ளது.	-மேற்படி-

4.3 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துதுரை	பரிந்துரை.
அரச நிறுவனங்களிற்கு அரச இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியை அறிமுகம் செய்வது தொடர்பாக 2018 ஒக்டோபர் 23 திகதிய இலக்கம் 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 திகதிய இலக்கம் 08/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம், அரச பெறுகைகள் நிறுவுனத்தை பதிவு செய்தல், கூட்டிணைப்பு	2024 ஆரம்ப சில மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பெறுகைகளும் இலத்திரனியல் பெறுகைகள் இன்றி மேற்கொள்ளப்பட்டதுடன், Toner வகைகள் மற்றும் Cartilage வகைகளை கொள்வனவு செய்யும் போது குறித்த வியாபாரக் குறிகிற்கு உரிய இயந்திரங்களிற்கான	பெறுகைகள் மேற்கொள்ளும் போது குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உத்தியோகர் பதிவு, வழங்குனர் பதிவு, வருடாந்த பெறுகைகள் திட்டத்தை சமர்ப்பித்தல், பெறுகைகள் அறிவித்தல் விளம்பரப்படுத்தல், விலைமனு ஒப்பீட்டு முறைக்கு இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியை பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள், அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், திணைக்களத்தினால் 2024 ஆண்டில் 8 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 2,751,980 ஆன பெறுகைகள் உருப்படிகளிற்காக இலத்திரனியல் பெறுகை தொகுதியை பயன்படுத்தாது விலைமனு ஒப்பீட்டு முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.	சேவை வழங்கும் அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் இலங்கையில் காணப்படுவதுடன் அந்த குறியீடுகளின் வகைகளிற்கு தேவையான உதிரிப் பாகங்களை அந்த நான்கு நிறுவுனங்களிடமும் கொள்வனவு செய்ய வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் பெறுகைகளிற்கு செலுத்துவது விளைவற்ற செயலாகையால் அனுப்பப்படவில்லை.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

4.4.1 வாகன சேதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
3 வாகனங்களிற்குரிய விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1)அ மற்றும் 104(3) பிரகாரம் ஆரம்ப விசாரணை அறிக்கையை வெளியிட 40 நாட்களிற்கும் 150 நாட்களிற்கும் இடையிலான காலம் கடந்திருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் விசாரணையின் பின் நட்டசேதம் இடம்பெற திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் பூரண அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய போதும், அந்த வாகன விபத்துக்களிற்குரிய பூரண அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை ஏனும் நடாத்தியிருக்காததுடன் மற்றைய வாகன விபத்து தொடர்பான பூரண அறிக்கையை சமர்ப்பிக்க 6 மாத காலம் கடந்திருந்தது. மேலும், திணைக்களத்தினால் நிதி அமைச்சிற்கு தற்காலிக பாவனைக்காக வழங்கியிருந்த இன்னுமொரு வாகனம் விபத்திற்குள்ளான தொடர்பாக நிதிப்பிரமாணம் 1642 பிரகாரம் பொலிஸிற்கு தாமதக்காது	இந்த வாகன விபத்துக்களில் ஒரு வாகனம் நிதி அமைச்சிற்கு சொந்தமாகையால் அந்த விபத்திற்குரிய நி.பி 104 ஆரம்ப விசாரணை அறிக்கை இந்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மற்றைய வாகன விபத்து தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க 6 மாத காலம் கடந்திருந்ததால் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். இந்த திணைக்களத்திற்கு சொந்தமான மற்றைய வாகனம் தற்காலிகமாக நிதி அமைச்சிற்கு ஒப்படைத்திருந்த சந்தர்ப்பத்தில் விபத்திற்குள்ளாகியுள்ளதுடன், அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறிக்கையிட்டிருக்காததுடன் சாரதியினால் குறித்த உத்தியோகத்தர்களிற்கு அறிக்கையிட்டுள்ளதாக கணக்காய்விற்கு உறுதியாகவில்லை. இந்த விபத்து இடம்பெற்று 09 மாதங்களின் பின்னர் ஆரம்ப விசாரணையை மேற்கொள்ள நியமிக்கப்பட்டிருந்த விசாரணை குழுவினால் 2024 நவம்பர் 29 திகதி நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் நட்டம் பற்றிய இறுதி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த போதும், அந்த அறிக்கை மூலம் உரியவாறு விபத்திற்கான விடயங்களை வெளிப்படுத்படவில்லையென உள்ளக கணக்காய்வினால் வெளிப்படுத்தியிருந்ததாகவும், அதன் பிரகாரம் இந்த விபத்து இடம்பெற்று 19 மாதங்களிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையவில்லை என அவதானிக்கப்பட்டது.	மீண்டும் ஒழுங்காக விசாரணை நடாத்துவதற்காக வேறொறு திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரை பெயரிட 2025.04.23 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

5 நல்லாளுகை

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஐக்கிய நாடு சபையின் 2030 ஆண்டு வரையான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணுதல் மற்றும் அவற்றை அடைந்துக்கொள்ளவதனை அளவிடுவதற்கு தேவையான பிரமாணங்களை இனங்காணுதல் மற்றும் அதற்குரிய சரியான தரவுத் தொகுதியொன்று உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்தாக அவதானிக்கப்டவில்லை.	04 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அற்குரிய பிரமாணங்கள் இனங்காணப்பட்டுள்ளன.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் உரியபிரமாணங்களை இ னங்கண்டுள்ளதாக குறிப்படப்பட்டிருந்த போதும் 2024 செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்கு உரியதாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் வேறாக இனங்காணப்டுவ தில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படுவதன் வாறு தனது விடயப்பரப்பின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி

		நோக்கங்கள்/ இலக்குகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மனித வளஙகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் உள்ளவாறான 42 ஊழியர் எண்ணிக்கையில், பொ.நி.சு. 14/2022 பிரகாரம் 5 ஆண்டுகள் வெளிநாட்டு விடுமுறை பெற்றுக்கொண்ட இரண்டு உத்தியோகத்தர்கள், சேவையை விட்டுச்சென்றதாக கருதும் ஒரு உத்தியோகத்தர் மற்றும் முறையான அங்கீகாரமின்றி சம்பளமற்ற கற்கை விடுமுறை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடங்கிருந்தனர். அதன் பிரகாரம், தொடர்ச்சியாக சேவையில் ஈடுப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட ஊழியர்கள் எண்ணிக்கை 38 ஆனது. அதன் பிரகாரம், திணைக்களத்தின் செயலாற்றுகைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் 21 சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் (17 வெற்றிடங்களுடன்) அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 35 சதவீதத்தவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்ததாக அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயலாற்றுகை மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள் உள்ளிட்ட வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள அல்லது தேவைபாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினறை திருத்தக்கொள்வதற்கு திணைக்களம் இது வரை முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடந்த ஆண்டில் திணைக்களத்தின் 17 சிரேஷ்ட மட்ட பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதற்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள இணைக்கபாட்டை தெரிவித்த கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும், பதிலாளர் இன்றி சேவைபுரியும் நிறுவனத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாதமைனாலும், தேர்த்தல் காலங்கள் போன்ற பலவேறு காரணங்களினால் அந்த உத்தியோகத்தர்களிற்கு இடமாற்றம் பெற முடியாமை, அந்த சில உத்தியோகத்தர்கள் இவ்வாண்டில் கடமைக்கு அறிக்கையிடல் இடம்பெற்றது. இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நூலகர் பதவி I/II/III தரத்தின் பதவியாக அங்கீகரிக்கப்ட்டுள்ள போதும் பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்த இந்த பதவிக்கு பொது நிர்வாக அமைச்சிலிருந்து இடமாற்றம் வழங்கி அனுப்பியுள்ளது விஷேட தர உத்தியோகத்தர் ஒருவரையாகும். ததனால் மூன்றாம் மட்டத்தில் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கையில் ஒரு மிகை உத்தியோகத்தர் காணப்படுகிறார். நூலகர்	விரைவில் தேவையான வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதவி விஷேட தர பதவி ஒன்றாக அங்கீகரித்துக் கொள்ள முகாமைத்துவ செவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.